செய்தி வெளியீடு எண் : 566 நாள்: 09.04.2022

# வேளாண்மை உட்கட்டமைப்பு நிதித்திட்டத்தின் கீழ் வட்டி மானியத்துடன் ரூ.2 கோடி வரை கடன் வசதி வழங்குவது குறித்த செய்தி வெளியீடு

விவசாயிகள் உற்பத்தி செய்த விளைபொருட்களை மதிப்புக்கூட்டி, இலாபகரமான விலை கிடைக்கும் வகையில், பல்வேறு உட்கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

கிராம அளவில் உள்கட்டமைப்புகளை உருவாக்க முன்வரும் விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வட்டி மானியத்துடன் கடன் வசதி செய்து தரும் வகையில், ஒன்றிய அரசு **வேளாண் உட்கட்டமைப்பு நிதி** (Agriculture Infrastructure Fund) எனும் திட்டத்தினை அறிவித்துள்ளது.

**இத்திட்டத்தில் எத்தகைய பணிகளுக்காக கடன் வசதி பெறலாம்?**

மின்னணு சந்தையுடன் கூடிய விநியோகத் தொடர் சேவை (Supply chain services including e–marketing platforms), சேமிப்புக்கிடங்குகள் (Warehouses), சேமிப்பு கலன்கள் (Silos), சிப்பம் கட்டும் கூடங்கள் (Pack Houses), விளைபொருளின் தரத்தை அளவிடும் அமைப்புகள் (Assaying Units), தரம் பிரித்து, வகைப்படுத்துவதற்கான இயந்திரங்கள், குளிர்பதன வசதிகள் (Cold Chains), போக்குவரத்து வசதிகள் (Logistics Facilities), முதன்மை பதப்படுத்தும் மையங்கள் (Primary Processing Units), அறிவியல் ரீதியாக பழுக்க வைக்கும் அறைகள் (Ripening Chambers) போன்ற அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மைக்கான உட்கட்டமைப்புகளை இத்திட்டத்தின் கீழ் உருவாக்கலாம். மேலும், விவசாயிகள் குழுக்களாக இணைந்து, வேளாண்மை இயந்திர வாடகை மையம் துவங்குவதற்கும், சூரிய சக்தி மோட்டார் அமைப்பதற்கும், இயற்கை இடுபொருட்கள் உற்பத்தி, நுண்ணுயிர் உற்பத்தி நிலையங்கள், நவீன, துல்லியப் பண்ணையத்திற்கான உட்கட்டமைப்புகள், பயிர் தொகுப்புகளை உருவாக்கி ஏற்றுமதி செய்வதற்கான வசதிகள் போன்ற பல்வேறு சமுதாய வேளாண் கட்டமைப்புகளுக்கும் இத்திட்டத்தின் கீழ் கடன் வசதி பெறமுடியும்.

**இத்திட்டத்தின் கீழ் எவ்வளவு கடன் பெற முடியும்?**

இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ரூ.2 கோடி வரை மூன்று சதவிகித வட்டி தள்ளுபடியுடன் (Interest Subvention) கடன் பெறலாம். மேலும் ரூ.2 கோடி

வரை பெறும் கடன்களுக்குக் கடன் உத்தரவாதமும் (Credit Guarantee) வழங்கப்படுகிறது.

**யார் யார் எல்லாம் இத்திட்டத்தில் பயன்பெற முடியும்?**

விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், சுயஉதவிக் குழுக்கள், கூட்டுப் பொறுப்புக்குழுக்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள், வேளாண் தொழில்முனைவோர், புதியதாக தொழில் துவங்க முன்வரும் நிறுவனங்கள் (Start ups), மத்திய / மாநில அமைப்புகள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளால் முன்மொழியப்படும் அரசு–தனியார் பங்கேற்புடன் கூடிய அமைப்புகள், மாநில முகமைகள்/ வேளாண் விளைபொருட்கள் விற்பனைக்குழுமங்கள் (APMCs), தேசிய மற்றும் மாநில கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டமைப்புகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகள், இத்திட்டத்தின் கீழ் கடன் வசதி பெறலாம்.

இத்திட்டத்தின்கீழ், கடன் வழங்குவதற்காக, தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான வங்கிகள், அதிகபட்சமாக 9 சதவிகித வட்டியில் கடன் வழங்குவதற்கு ஒன்றிய அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன. இது தொடர்பாக, கூடுதல் விபரங்கள் https://agriinfra.dac.gov.in என்ற இணையதள முகவரியில் தெரிந்து கொள்ளலாம்.

தமிழ்நாட்டில் நடப்பு 2022–23 நிதியாண்டில் ரூ.1660 கோடி மதிப்பில் வேளாண் உட்கட்டமைப்புகளை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒன்றிய, மாநில அரசின் பல்வேறு திட்டங்களின் மானியத்தையும் இணைந்தே பெற்றுக் கொள்ளும் வசதி இத்திட்டத்தில் உள்ளதால், மூன்று சதவிகித வட்டி தள்ளுபடியுடன் கடன் வசதி பெற விரும்புபவர்கள் தங்கள் திட்டத்திற்கான விபரங்களுடன் அருகில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் விற்பனை, வேளாண் பொறியியல் துறை அலுவலர்களையோ, வங்கி மேலாளர்கள் அல்லது நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர்களையோ தொடர்பு கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**